DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NANNILAM

| | | |
|---|---|---|
| Case No. | : | C. C No. 03/2025 |
| Deposition of witness | : | P.W - 6 |
| Name | : | அருண்குமார் |
| Father's /Husband Name | : | ராமமூர்த்தி |
| Village | : | திருவாரூர் |
| Taluk | : | திருவாரூர் |
| Age | : | 37 |
| Occupation | : | மருத்துவர் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 26th day June 2025.
Accused A1 to A 3 present.

**முதல் விசாரணை:–**

நான் தற்போது திருவாரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் உதவி மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 31.10.2024–ம் தேதி இரவு 08.03 மணி அளவில் திருவாரூர் அரசு மருத்துவமனையில் பணியில் இருந்த போது 39 வயது மதிக்கத்தக்க மூவேந்தர் என்பவரை ரமேஷ் என்பவர் மூலம் என்னிடம் சிகிச்சைக்காக அழைத்து வரப்பட்டார். அவரை நான் விசாரித்த போது அன்றுமாலை 06.00 மணியளவில் நன்னிலம் கச்சேரி தெரு அருகே தெரிந்த மூன்று நபர்கள் அருவாளை கொண்டு தாக்கியதாக என்னிடம் கூறினார். அவரை நான் பரிசோதித்த போது அவர் சுய நினைவுடன் காணப்பட்டார். அவரது உடலின் மார்பு பகுதியில் 10 X 3 செ.மீ அளவிலான சிராய்ப்பு காயங்கள் காணப்பட்டது. அவரது வயிற்றில் 5 X 3 செ.மீ அளவிலான குத்துகாயமும் காணப்பட்டது. அவருக்கு விபத்து பதிவேடு பதிவு செய்து உள் நோயாளியாக அனுமதித்தேன். தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் விபத்து பதிவேட்டில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். நான் வழங்கிய விபத்து பதிவேடு **அ.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி நபர் கூறிய வகையில் தாக்கப்பட்டிருந்தால் மேற்படி காயங்கள் ஏற்பட வாய்ப்புள்ளது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:–**

ஒரு நபர் மதுபோதையில் இருசக்கர வாகனத்தில் சென்று கூரான பகுதியில் மோதி கீழே விழுந்தாலும் மேற்படி காயங்கள் ஏற்பட வாய்ப்புள்ளது என்றால் சரிதான்.

M S BHARATHIDHASAN
Digitally signed by M S BHARATHIDHASAN
DN: cn=M S BHARATHIDHASAN, ou=TIRUVARUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamilnadu, c=IN
Date: 2025.07.28 18:09:47 +0530